**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 164/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW-13</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சண்முகவேல் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சிவன் நாடார் | தொழில் | : | பாத்திர வியாபாரம் |
| கிராமம் | : | ஆவுடையானூர் | வயது | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 08th, 2025.

**(2, 3, 7, 10, 11 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் பாத்திர வியாபாரம் செய்து வருகிறேன். எதிரி சிவபிரகாஷை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி சிவபிரகாஷின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சாட்சி அருணாச்சலம் என்னுடைய பெரியப்பா. என்னுடைய பெரியப்பா அருணாச்சலத்தின் வீட்டில் அவர்களை அடித் போட்டு விட்டு நகையை எடுத்து சென்றதாக நான் கேள்விபட்டேன். அந்த நகைகளை திரும்ப வாங்கிய வகைக்கு போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் அந்த கையெழுத்துக்களை ஆவுடையானூரில் வைத்து போட்டுக்கொடுத்தேன். சிவபிரகாஷின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.23** ஆகும். அத்தாட்சியில்

உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.24** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 29.09.2022ம் தேதி காலை 09.00 மணியளவில் தென்காசி புது பஸ்ஸ்டாண்ட் பக்கம் போலீசார் என்னையும், சபாபதி என்பவரையும் வரச்சொல்லி எங்கள் இருவர் முன்னிலையிலும் வழக்கின் எதிரி சிவபிரகாஷ் என்பவரை காவல் ஆய்வாளர் கைது செய்து என் முன்பாகவும், சாட்சி சபாபதி முன்பும் விசாரித்தார்கள் என்றும், அப்போது எதிரிகள் தாங்களாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்பு பதிவு செய்தார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சம்பவத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த தங்க டாலர் ஜெயின் ஒன்றையும், பணம் ரூ.50,000/–ஐயும் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் சாட்சிகளாக நாங்கள் கையெழுத்து போட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.09 11:19:40 +0530

## வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 164/2023
## வழக்கு சாட்சி PW-14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லட்சுமிநாராயணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சிவனனைந்த பெருமாள் | தொழில் | : | ரியல் எஸ்டேட் வியாபாரம் |
| கிராமம் | : | அகஸ்தியர்பட்டி | வயது | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 08th, 2025.

**(2, 3, 7, 10, 11 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

### முதல் விசாரணை :

நான் அகஸ்தியர்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். பவகுகன் எனது நண்பர். 2022 ம் வருடம் ஒருநாள் காவல்துறையினர் எனது ஊரின் பக்கத்து தெருவில் உள்ள சொக்கலிங்கம் கணேசன் என்பவரின் நண்பர்களை சத்திரம் போலீசார் கைது செய்து விட்டு போனதாக தகவல் சொன்னார்கள். மறுநாள் நான் அக்கம்பக்கத்தில் விசாரித்தபோது, சத்திரத்தில் ஒரு வாத்தியார் வீட்டில் நகையும், பணமும் கொள்ளையடித்து விட்டு போனதாக கேள்விபட்டேன். எதிரி ஜான்விமல்சதீஷ் எங்கள் ஊரில் பாலாறு கடைத்தெருவிற்கு அடிக்கடி வந்து செல்வார். அப்போது, அவரை நான் பார்த்துள்ளேன். தற்போது அவர் உயிருடன் இல்லை.

எதிரி சொக்கலிங்ககணேசனையும் சில நாட்கள் கழித்து கைது செய்ததாக கேள்விபட்டேன். ஜான்விமல்சதீஷ் எங்கள் வீட்டிற்கு 4 வது தெரு தாண்டி காவேரி தெரு மற்றும் பாரதியார் தெருவில் ஆகிய இடங்களில் உள்ள வீட்டில் குடியிருந்து வந்தார். ஜான்விமல்சதீஷையும் அந்த வழக்கில் கைது செய்ததாக நான் கேள்விபட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** –

எனக்கு கைது செய்த விபரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி ஜான்விமல்சதீஷ் எந்த வீட்டில் குடியிருந்து வந்தார் என்று எனக்கு தெரியும். ஆனால் அந்த வீடுகளின் கதவு எண்கள் எனக்கு தெரியாது. நான் இந்த விபரங்களை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு, எந்த விபரங்களும் கேள்விபடவில்லை என்றாலும், போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.09 11:19:47 +0530